# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.582/C/2024

திரு E. சாம்சன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர் மற்றும்
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி கோட்டம்,
நாகர்கோவில் மாவட்டம் - 629 001. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 21.06.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 07.07.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.08.2023 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 19.12.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.01.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு E. சாம்சன் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா. கிருஷ்ணம்மாள், கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், கன்னியாகுமரி கோட்டம், நாகர்கோவில் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, கிண்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், ஜீரோபாயின்ட் வனத்துறை சோதனைச்சாவடியில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் விவரம் மற்றும் கடந்த 12.01.2019 முதல் 14.01.2019 வரையில் பராமரிக்கப்பட்ட பதிவுகளின் உண்மை சான்றிடப்பட்ட நகல்கள், கடந்த 12.01.2019 முதல் 14.01.2019 வரையில் ஜீரோபாயின்ட் வனத்துறை சோதனைச்சாவடியில் உள்ளே மற்றும் வெளியே கடந்த சென்ற வாகனங்கள் பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 31 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு பொ.த.அ.எண்.RTI/4705/2023 நாள் 03.07.2023 மற்றும் பொ.த.அ.எண்.RTI/11067/2024 நாள் 27.02.2025 ஆகிய தேதிகளிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரரின் மனு குறித்து, வன உயிரின வழக்கு எண்.1/2019 தொடர்பாக வழங்கப்பட்ட மனித உரிமை ஆணையத்தின் உத்தரவினை எதிர்த்து சம்பந்தப்பட்ட வனத்துறை பணியாளர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.(MD) No.19752, 25574, 26401, 28801/2022-ன்படி வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் மற்றும் வன உயிரின வழக்கு எண்.2/2019 தொடர்பாக மனுதாரர் குலசேகரம் காவல் நிலையத்தில் குற்றவியல் பிரிவின்கீழ் (FIR.12/2019 நாள் 13.01.2019)-ன்படி 12 வனத்துறை ஊழியர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும் மேற்படி வழக்குகள் குறித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் அதனடிப்படையில் தகவல்கள் வழங்கப்படும் என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனு தொடர்பான வழக்குகள் மதுரை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருப்பதால் தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், மதுரை உயர்நீதி மன்றத்தின் வாயிலாக உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில், அவ்வுத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படும் என பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தினை இவ்வாணையம் ஏற்று, மதுரை உயர்நீதி மன்றத்தின் வாயிலாக பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படவேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.582/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலர் மற்றும்
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
கன்னியாகுமரி கோட்டம்,
நாகர்கோவில் மாவட்டம் - 629 001.

**<u>வழக்கு எண்.SA.582/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு E. சாம்சன்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு நுண்ணறிவு பிரிவு,
திருநெல்வேலி மாநகரம்,
திருநெல்வேலி - 627 002.

Copy to: File
SNPS / 17.04.2026